மன்மிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 29 வியாழக்கிழமை (15 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 19

பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடவைகளை
தெரிவு செய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.



# தற்போதைய சமாதான சந்தர்ப்பம் சரித்திர முக்கியத்துவம் நிறைந்தது!

## "ரைம்" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தலைவர் பிரபாகரன்

கொழும்பு, டிசம்பர் 15
தற்போது தோன்றியுள்ள சமாதானத்துக்கான சந்தர்ப்பம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வர்ணித்திருக்கிறார்.

சர்வதேச பிரசித்திபெற்ற "ரைம்" ஆங்கில சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் "ரைம்" சஞ்சிகையின் விசேட செய்தியாளராக புதுடில்லியிலிருந்து இயங்கும் அனிதா பிரதாப் என்ற பெண் பத்திரிகையாளர் அண்மையில் இலங்கை வந்திருந்தார்.

அவர் தமது யாழ் வருகையின்போது தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேட்டி கண்டார்.

முன்னரும் தலைவர் பிரபாகரனை இவர் பல தடவைகள் பேட்டி கண்டு அவற்றை "ருடே", "ரைம்" சஞ்சிகைகளில் எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவரை பேட்டி கண்டு அவர் எழுதிய செய்திக் கட்டுரை கடந்த 10 ஆம் திகதி

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழக் கல்வித் தேர்வு பெறுபேறுகள் இன்று

யாழ்ப்பாணம், டிச. 15
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட இவ்வாண்டுக்கான தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படவுள்ளன. அந்தந்த கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாக பரீட்சைப் பெறுபேறுகள் இன்று பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை கோட்டம் தவிர்ந்த ஏனைய கோட்டங்களின் பெறுபேறுகளும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பெறுபேறுகளும் எதிர்வரும் திங்களன்று வெளியிடப்படும்.

இந்தத் தேர்வில் மாணவர் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகள் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் இந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்டத்தில் முதல் பத்துப் பேர்

யாழ்ப்பாணம், டிச. 15
தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

★ சுதர்சனா மகேந்திரன் — வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி — 710 புள்ளிகள். (8 'டி')

★ வரத்தினம் இரயணன் — யாழ். இந்துக் கல்லூரி — 698 புள்ளிகள் (8 'டி')

★ யோகநாதன் சிவராம் — தெல்லிப்பளை யூனியன் கல்லூரி — 697 புள்ளிகள். (8 'டி')

★ சுகிர்தா நவரட்ணசிங்கம் — வேம்படி மகளிர் கல்லூரி — 686 புள்ளிகள் (8 'டி')

★ கணேசநாதன் சிறிவிசாகன் — இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி — 680 புள்ளிகள் (8 'டி')

★ சிவசோதி செந்தூரன் — யாழ். இந்துக் கல்லூரி —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவிக்கு முதலிடம்

### 8 பாடங்களில் 710 புள்ளிகள்

யாழ்ப்பாணம், டிச. 15
இவ்வாண்டுக்கான தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவியான சுதர்சனா மகேந்திரன் மொத்தம் 710 புள்ளிகளைப் பெற்றுத் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் தமிழ் மொழிப் பாடத்தில் ஆகக்கூடிய புள்ளியை (91 புள்ளிகள்) இவரே பெற்றுள்ளார்.

இவருக்கு தமிழீழ தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும், விடுதலைப் புலிகள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

[மு]தலா 90 புள்ளிகளைப் பெற்று தமிழ் மொழிப்பாடத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ள மாணவர்கள் வருமாறு:-

★ உமா இராசேந்திரம் — வேம்படி மகளிர்

★ சுகுணாளினி கந்தையா — வேம்படி மகளிர்

★ சஞ்சிதா தில்லைநாதன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கோட்ட மட்டங்களில் சிறப்பு பரிசு பெறுவோர்

யாழ்ப்பாணம், டிச. 15
தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் கோட்ட ரீதியாக முதல் இரு இடங்களையும் பெற்று தமிழீழ தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசுகளையும் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் சான்றிதழ்களையும் பெறுகின்ற மாணவர் விவரமும் அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளும் வருமாறு:-

யாழ்ப்பாணம்

★ பிரதீபா குணராசா — வேம்படி மகளிர் — 664

★ உருத்திரன் ஜூட் துஷ்யந்தன் — சென். ஜோன்ஸ் — 661

நல்லூர்

★ அரசரத்தினம் ஐங்கரன் — யாழ். இந்துக் கல்லூரி — 660

★ பத்மநாதன் கஜன் — யாழ். இந்துக்கல்லூரி — 658

தெல்லிப்பளை

★ அனிதா செல்வராசா — மகாஜனக் கல்லூரி — 664

★ கெங்காதரன் இந்திர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 2,000 தொன் மாவுடன் 'ஹபரண' கப்பல் வந்தது!

### மேலும் தருவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 15
இரண்டாயிரம் தொன் மாவுடன் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'ஹபரண' கப்பலை மேலும் 2 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை எடுத்தவர திருகோணமலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அக்கப்பலில் தற்போது ஏற்றி வரப்பட்டுள்ள மாவை இறக்கும் வேலைகள் உடன் நேற்று ஆரம்பமாகின.

நத்தார் காலத்தில் மக்களுக்கு கூடுதல் மாவை விநியோகிக்க வசதியாக மேலும் மாவை கப்பலில் எடுத்து வருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

## தொண்டா இந்தியாவுக்கு பயணம்

கொழும்பு, டிச. 15
அமைச்சர் தொண்டமான் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் நாடு திரும்பும்வரை பிரதி அமைச்சர் ஹேமா இரத்நாயக்கா, பதில் கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சராக நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். [உ-எ]

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

மணிலா, டிச.15
புத்தளம் மாவட்டம் இரணவில பகுதியில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" வானொலி நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கொழும்பில் பேரணியும் அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன.

பௌத்த, கத்தோலிக்க மதகுருமார் இதில் கலந்து கொண்டனர். (உ-3)

## பெரும் தாக்குதலுக்கு புலிகள் முஸ்தீபு

கொழும்பு, டிச. 15
வட பகுதியில் உள்ள ஆயுதப்படை முகாம்களில் ஒன்றின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக, பிந்திய புலனாய்வு அறிக்கைகளை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. [உ-எ]

முச்சந்தி முரளி



அப்ப... உந்த வேலை நிறுத்தம் தொத்[illegible] போலை...!

## பிரபாவை கைது செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை

### ஜனாதிபதி சந்திரிகா பேட்டி

நியுயோர்க், டிச. 15
தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு.வே.பிரபாகரனை கைது செய்யும் எண்ணம் தமது அரசுக்கு இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

"ரைம்" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் தலைவரை சிறைவைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஜனநாயக முறையில் திரு. பிரபாகரன் யாழ்ப்பாணப் பிரதேசத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் அது குறித்து ஆட்சேபனை எதுவும் இல்லை—

நிலைமை அவ்வாறில்லாவிடின் உலகில் எங்குமே அமைதி உண்டாக வாய்ப்பு இருக்காது— என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார். (அ-க-3-6)

## பிரபாவை நாடு கடத்த கோருவது குறித்து ஆராய்வு

### இந்திய அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 15
ராஜீவ் காந்தி கொலை வழக்கின் சந்தேகநபரான விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவரும் அனைத்துச் சாத்தியக்கூறுகள் பற்றியும் இந்திய அரசு பரிசீலித்துவருவதாகவும்—

இவ்விஷயம் குறித்து இலங்கை அரசை அணுகுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும்—

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாத்தியா நேற்று ராஜ்யசபையில் தெரிவித்தார்,

எழுத்து மூலம் அளித்த பதில் ஒன்றில்,—

அரசும் பல்வேறு அமைப்புகளும் இப்பிரச்சினை குறித்து பரிசீலித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (உ-எ)

## அடிச்சட்டம், இயந்திரம் உட்பட பதிவு செய்யப்படாத ஊர்திகளை வைத்திராதீர்!

### கராஜ்காரர்களுக்கு அறிவுறுத்தல்

மோட்டார் ஊர்திகள் திருத்தும் நிலையங்களில் திருத்தம் செய்வதற்கென பொதுமக்களால் ஒப்படைக்கப்படும் ஊர்திகள், மற்றும் ஊர்திகளின் அடிச்சட்டம், ஊர்திகளின் இயந்திரம் யாவும் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் அவசியம்.

பதிவுசெய்யப்படாத ஊர்திகள், ஊர்திகளின் அடிச்சட்டம் ஊர்திகளின் இயந்திரம் என்பன திருத்தும் நிலையங்களில் காணப்படின் அவற்றின்மீது இம் மாதம் 18ஆம் திகதி முதல் தமிழீழக் காவல்த்துறையினரும் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர். போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

## 17 தமிழ் எம்.பிமாருடனும் சந்திரிகா நேற்று பேச்சு!

கொழும்பு, டிச. 15
இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான அரசியல் தீர்வு காண்பதற்கு அரசாங் [illegible] கள் குறித்தும் — [illegible] அரசியல் நிலைவரம் குறித்தும் ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா 17 தமிழ் எம்.பிக்களுடன் நேற்று பிற்பகல் 2 மணியளவில் பேச்சு [illegible]த்திருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## எழுபது அமைப்புகளில் இப்போது வேலை நிறுத்தம்

கொழும்பு, டிச. 15
இலங்கையில் தற்போது 70 அமைப்புகளில் வேலை நிறுத்தங்கள் இடம்பெறுவதாக ஐ. தே. க. தவிசாளர் ஏ. சி. எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

இவ்வேலை நிறுத்தங்களுக்கு தமது கட்சியின் முன்னைய ஆட்சியே காரணம் என அரசு கூறிவருவதாகவும்—

ஆனால் தமது கட்சி அதற்குப் பொறுப்பு இல்லை எனவும்—

வேலை நிறுத்தங்கள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் எனவும்— அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை—

வேலை நிறுத்தம் என்ற போர்வையில் நடக்கும் நாசவேலைகளை பார்த்துக்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## விசேட பொலீஸ் குழு சந்திரிகா அமைத்தார்

கொழும்பு, டிச. 15
நாட்டில் தொழிலாளரிடையே நிலவும் அமைதியின்மையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமைச்சரவைக் குழு ஒன்றையும் விசேட பொலீஸ் பிரிவு ஒன்றையும் அமைத்திருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்திருக்கிறார்.

சட்டவிரோதமான நடவடிக்கைகளை மேற்கொள்வோருக்கு எதிராக பொலீஸார் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்று ஜனாதிபதி அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

தற்போது இடம்பெற்று வரும் கைத்தொழில் பிணக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள அம்சங்கள் குறித்து நாட்டு மக்களுக்கு விரைவில் தெரிவிக்கவிருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

## வேலை நிறுத்தப் போரில் அரசாங்க டாக்டர்கள்!

கொழும்பு, டிச. 15
அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

உதவி வைத்திய அதிகாரிகளை, டாக்டர்கள் தரத்துக்குச் சமமான முகலாந்தர வைத்திய அதிகாரிகள் சேவையில் சேர்த்துக் கொள்வதென்ற அரசாங்கத்தின் முடிவை ஆட்சேபித்தே வைத்திய அதிகாரிகள் [டாக்டர்கள்] நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

உதவி வைத்திய அதிகாரிகளும், பதிவு செய்யப்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசர் வருகைக்கு தெற்கில் எதிர்ப்பு அலை!

### மகாநாயக்கர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, டிச. 15
இலங்கைக்கு விஜயம் செய்யும் பாப்பரசரை வரவேற்கும் எந்த வைபவத்திலும் கலந்து கொள்வதில்லை என நான்கு பௌத்த மத பீடங்களினதும (நிக்காயாக்களினதும்) மகாநாயக்க தேரர்கள் முடிவு செய்துள்ளனர்.

பாப்பரசர் சமீபத்தில் வெளியிட்ட புத்தகம் ஒன்றில் பௌத்த சமயம் குறித்து குறிப்பிட்டிருக்கும் கருத்து தமக்கு ஏற்புடையது அல்ல என்பதாலேயே தங்கள் இவ்வாறு தீர்மானித்திருப்பதாக மல்வத்தை, அஸ்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதிக்குள் புலிகள் பலர் ஊடுருவல்?

கொழும்பு, டிச 15
தீவுப்பகுதிக்குள் — இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதியில்— விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் ஊடுருவியிருக்கலாம் என தாங்கள் சந்தேகிப்பதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காரைநகர், ஊர்காவற்றுறை பகுதிகளில் கடந்த 9 ஆம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரை நோக்கி விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் கைக்குண்டு ஒன்றை வீச எத்தனித்ததாகவும் —

படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## இறக்குவானைப் பகுதியில் அதிபர் மீது 'அசிட்' வீச்சு!

கொழும்பு, டிச. 15
மலையகத்தில் — இறக்குவானை தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஐ. பாண்டுரங்கநாதன் மீது 'அசிட்' வீசப்பட்டதால் அவர் காயமுற்று இரத்தினபுரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு இவர் திருமண நிகழ்ச்சி ஒன்றுக்கு சென்று விட்டு வீடு திரும்பும் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

"அசிட்" வீசப்பட்டதால் அவருடைய கண்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை

- அடையாள அட்டை
- வாகன வரி அனுமதி அட்டை
- அழகிய வர்ணப் படங்கள்

**LAMINATION SERVICE**

சகல அளவுகளிலும் கவரிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

சன்லைட் றைக்கிளீனேர்ஸ்

## சூரியப் பிரகாஸ்

பெரிய கடை, யாழ்ப்பாணம்.

[ஓ-6]



## மண்ணெண்ணெய் விநியோகம்

16-12-94 தொடக்கம் 19-12-94 வரை காலை 9 தொடக்கம் மாலை 2 மணிவரை வழங்கப்படும். இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு 5லீட்டரும் ஏனைய மாணவர்களுக்கு 3 லீட்டர் வீதமும் வழங்கப்படும்.

மாணவர் அவை,
தொழில் நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[8085]



**SCIENCE COLLEGE**
பெருமாள் கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

இரசாயனவியல்
திரு. மகாதேவா

பௌதிகவியல்
திரு. ஜெயசீலன்

தூய-பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம்

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன்

தாவரவியல்
திரு. சிறிகரன்

**P' NEW SCIENCE CENTRE**
எழிலகம் முன்
யாழ்ப்பாணம்.

இரசாயனவியல்
திரு. செல்வா
திரு. மகேஸ்வரன்

பௌதிகவியல்
திரு. ஜெயசீலன்
திரு. மோகன்

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன்

தாவரவியல்
திரு. பாலா

தூய-பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம்

★ 95 A/L புதிய பிரிவுகள்
★ 95 A/L மீட்டல்: திங்கள் → வெள்ளி வகுப்புக்கள்
★ 95 A/L மீட்டல்: சனி → ஞாயிறு வகுப்புக்கள்

**ஆரம்பம்: 16 - 12 - 1994** வெள்ளி

(நேர அட்டவணை நிறுவனத்தில் பெறலாம் அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

[சி-7]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 29 — 07 — 1923

உதிர்வு: 16 — 11 — 1994

### அமரர் முருகேசு அருளம்பலம்

அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் குலவிளக்காய் பூப் போன்ற புன்னகையும் எங்கு சென்றதையா எங்களுக்கு அன்பும் அறிவும் ஊட்டி ஆதரித்து எம்மை வாழ வைத்த தெய்வமே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்;

நாளை (16 - 12 - 94) எமது இல்லத்தில் இடம் பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அ. தவம் (M. A. T.),
தவம் களஞ்சியம்,
கோண்டாவில்.

பொ. புலேந்திரன்,
இராமகிருஷ்ண மகா வித்தியாலய வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(34199)

## கருத்தரங்கு

தென்மராட்சி, டிச. 15

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் மாதாந்த போயா தின சுகாதாரக் கருத்தரங்கு 17 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கழகத் தலைவர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை 'இருதய நோய்கள்' என்னும் பொருளில் உரையாற்றுவார்.

[க-117]

★ ★ ★

வட்டுக்கோட்டை, டிச. 15

சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலையமும் நல்லொழுக்க சங்கமும் இணைந்து நடத்தும் சுகாதாரக் கருத்தரங்கு இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு நல்லொழுக்க சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் செல்வி. த. மங்களகௌரி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் திரு. அ. துரைமணி கலந்து கொள்வார். (ஐ-161)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 15

வரலாற்று நூல் எழுதுவது சம்பந்தமான சமூகவியல் மன்றம் நடத்தும் கருத்தரங்கு யாழ் பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கு 16 ஆம் திகதி நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. [க]

## சாரணர் தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 15

சாரணர் தலைமைத்துவப் பயிற்சியின் அவத்தை இரண்டைப் பூர்த்தி செய்துள்ள யாழ். மாவட்ட சாரணத் தலைவர்களுக்கு புத்தூக்கப் பயிற்சிப் பாசறை ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

''தரு'' சின்னப் பயிற்சிப் பாசறைக்கு முன்னோடியாக இந்தப் புத்தூக்கப் பயிற்சிப் பாசறை நடத்தப்படவுள்ளது. இந்தப் பயிற்சிப் பாசறையில் கலந்து கொள்ள விரும்பும் அவத்தை இரண்டைப் பூர்த்தி செய்த சாரணத் தலைவர்கள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு சாரணாளர் சங்கச் செயலாளர் திரு. வீ. ரி. மனோகரன் தெரிவித்துள்ளார். (ஐ)


**O/L Dec. 94**

நடைபெற்ற ஆங்கில வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கூடுதல் பிரதிகள் எடுப்பவர்களுக்கு 25% கழிவு வழங்கப்படும்.

**BOND**
யாழ்ப்பாணம்.

(8082)


**University of Jaffna, Sri Lanka**

**FACULTY OF SCIENCE**

The Commencement of the First Semester (1993/94) for the 2nd, 3rd and 4th year students and the 2nd Semester (1993/94) for the first year students have been postponed from 19-12-94 to 27-12-94.

– REGISTRAR

[C-9829]

# கிழங்கு, வெங்காயம் இறக்குமதியில் தனியார் வர்த்தகர்கள் ஆர்வம்

உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் செத்தல் மிளகாய் ஆகியவற்றை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய தனியார் வர்த்தகர்கள் முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையமும் வெளிநாடுகளில் இருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

நத்தாருக்கு முன்னர் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறையலாம் என்று கொழும்பில் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சை 28 இல்

### 50 நிலையங்களில் இங்கு நடக்கும்

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தமிழ்மொழி மூலம் கற்பிப்பதற்கு தகுதியுடையவர்களை பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணத்தில் 50 நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறும். பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## படையினர் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபடவேண்டும்

### ஹரி குணதிலக கூறுகிறார்

கொழும்பு, டிச. 15

யுத்தத்துக்கு அரச படையினர் தொடர்ந்து பயிற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்தார்.

ஆயுதங்களை ஆயத்தம் செய்யும் பணியிலும் அரச படையினர் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையைத் தாம் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-6)

## பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ்ப்பாணம் நாவலர் வீதி புதிய கல்வி நிலையத்தின் பரிசளிப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

புதியகல்வி நிலைய அதிபர் திரு. த. அம்பிகைபாகன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ்ப்பாணம் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சத்தியலட்சுமி காங்கேயன் பிரதம விருந்தினராகவும் புனித மரியாள் வித்தியாலய அதிபர் திரு. சி. தார்சியஸ் சிறப்பு விருதினராகவும் கலந்து கொள்வர்.

## செயலகத்தில் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ். செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு விவசாய அபிவிருத்திக் கூட்டமும்—

பிற்பகல் 2.30 மணிக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக் கூட்டமும்— நடைபெறவிருக்கின்றன. [உ-3]

## உ. அரச அதிபர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 15

இதுவரை நல்லூர் உதவி அரச அதிபராகப் பணியாற்றி வந்த திரு. எல். இளங்கோ வேலணை உதவி அரச அதிபராக நேற்றுமுதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [உ-3]

## கூ. ச. கடையில் 5 லீற்றர் மண்எண்ணெய்

குருநகர், டிச. 15

பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஐந்து லீற்றர் மண்எண்ணெய் யாழ். பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டு வருகிறது.

பாவனையாளர்கள் இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் தமது பங்கீட்டு அட்டைக்கு உரிய ஐந்து லீற்றர் மண்எண்ணெயைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (இ 51

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 2.30 மணியளவில் ஆசிரியர் திரு. இ. கதிர்காமசேகரன் ''பக்தி வைராக்கியமும் மயான வைராக்கியமும்'' என்ற பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அதிபர் திரு. ந. அனந்தராஜ் அறிமுகவுரை நிகழ்த்துவார். [க]

## அலுவிகார மீது குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 15

வீடு ஒன்றின் மீது கல்லெறிந்து சேதமேற்படுத்தியதாக முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் அலிக் அலுவிகார மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவருடன் இன்னுமொரு நபரும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு மார்ச் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-எ)

## ரத்வத்தை பதவி நீக்கம்

கொழும்பு, டிச. 15

ஜனசக்தி நம்பிக்கை நிதியத்தின் பிரதம நிர்வாகியும், நிர்வாக இயக்குநருமான சரித்தா ரத்வத்தை ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

1991இல் அப்போதைய ஜனாதிபதியால் இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட இவர் வெளிநாட்டுச் செலாவணியில் மாதம் 50 ஆயிரம் ரூபா (ஆயிரம் டொலர்) சம்பளமாகப் பெற்று வந்தார் என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஐ-எ)

## வயோதிபர் படுகாயம்

புத்தூர் சந்தியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற லொறி—சைக்கிள் விபத்தில் வயோதியர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளில் சென்றவரான பொன்னம்பலம் கைலாயபிள்ளை (வயது 74) என்பவரே படுகாயமடைந்தவராவார் இவர் பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து புத்தூரில் வசித்துவருகிறார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-15)

## பாப்பரசரின் நினைவாக நாணயம்

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயத்தை நினைவு கூருமுகமாக நாணயம் ஒன்றை வெளியிடுவது பற்றி திறைசேரி அதிகாரிகள் பரிசிலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் இது குறித்து முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட தொகை நாணயக் குற்றிகளே மத்திய வங்கியினால் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## கல்விக் கழக ஆசிரியருக்கு

நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த கல்விக்கழக ஆசிரியர் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கோட்டக் கல்விப் பணிமனையில் சந்திக்குமாறு நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கேட்டுள்ளார். [க]

## பொலீஸார் சேவையில்

நத்தார், புதுவருடப் பிறப்பு ஆகிய பண்டிகைக் காலங்களில் கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிக்க 3 ஆயிரம் பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

முடிச்சுமாறிகளிடமிருந்து பொதுமக்களை பாதுகாக்கவும், வாகனப் போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனிக்கவும் இப்பொலீஸார் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை பிரதிப் பொலீஸ் மா அதிபர் சந்திரா மெண்டிஸ் தெரிவித்தார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

சுன்னாகம்

காலஞ்சென்ற அ. வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின்

மூத்த மகள்:
திருமதி
ஞானமணி சதாசிவரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியை)



மண்ணுலகில்: 06—09—1928
விண்ணுலகில்: 28—12—1992
திதி: 06-01-1995

மூத்த மகன்:
அ. வே. ஞானரத்தினம்
(இளைப்பாறிய அரச நில அளவையாளர்)



மண்ணுலகில்: 16—10—1932
விண்ணுலகில்: 28—12—1993
திதி: 16-12-1994

நினைவு கூர்பவர்
பூ. சதாசிவரத்தினம்
(சட்டத்தரணி)

புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

(சி/5753)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைக்கு நீங்கள் தீர்வு கண்டால் எமக்கு ஒரு பிரச்சினை குறைந்துவிடும்

## கதிர்காமரிடம் ராவ் இப்படிக் கூறினார்

கொழும்பு, டிச.15

வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் அண்மையில் புதுடில்லி சென்றிருந்த போது இந்திய சர்வதேச நிலையம் நடத்திய கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.

முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் எரிக் கொன்ஸல்வேஸ் அந்தக் கூட்டத்துக்குதலைமைவகித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 1987 காலப் பகுதியில் இலங்கைக்கானஇந்தியத் தூதராக பணியாற்றியவரும் பின்னர் இந்திய வெளியுறவுச் செயலாளராகவிருந்தவருமான ஜே. என். டிக்ஸிற்றும் காணப்பட்டார்.

இனப்பிரச்சினைக்கு நீங்கள் தீர்வு கண்டு விட்டால்எமக்கு ஒரு பிரச்சினை குறைந்து விடும் — இப்படி இந்தியப் பிரதமர் ராவ் தம்மிடம் தெரிவித்ததாக திரு. கதிர்காமர் அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

''இப்படி நீங்கள் கூறியதாக நான் வெளியே சொல்லலாமா'' என்று பிரதமர் ராவைக் கேட்டேன். அவர் அதற்கு 'நான்இப்படிக் கூறியதாக நீங்கள் எங்கு வேண்டுமானாலும் கூறலாம் என்றும் ராவ் என்னிடம் தெரிவித்தார் — இப்படி திரு. கதிர்காமர் மேலும் கூறினார். (ஐ-எ)

காக்கைதீவுப் பகுதியில்

## 50,000 தேக்கு கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கை

சண்டிலிப்பாய், டிச. 15

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவிலுள்ள காக்கைதீவுப் பகுதியில் 50 ஆயிரம் தேக்கு கன்றுகளை விரைவில் நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வருட பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை கொண்டு அனுராதபுரத்திலிருந்து இத்தேக்கம் கன்றுகளை பெற்று இங்கு கொண்டு வந்து விரைவில் நடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

தேக்கம் கன்றுகள் இங்கு வந்து சேர்ந்ததும் காக்கைதீவுப் பகுதியிலுள்ள வெளிகளிலும், வீதி ஓரங்களிலும் இவை நடப்படுமெனவும் —

மேற்படி பிரதேச செயலர் பிரிவு திட்டமிடல் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

## தொலைக் கல்வி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், டிச. 15

1993 ஒக்டோபர் மாதம் பரீட்சை ஆணையாளரால் நடத்தப்பட்ட பரீட்சையில் யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களும், பகுதி I, பகுதி II இல் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்துள்ளதாக சிரேஷ்ட போதனாசிரியர் திரு. ச. சரவணமுத்து தெரிவிக்கிறார். இவர்கள் அனைவரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். (க)

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம் டிச, 15

அதிகளவு தேங்காய்களை விளைச்சலாகத் தரக் கூடிய கலப்பின தென்னங்கன்றுகள் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நல்லின தென்னங் கன்றுகளைப் பெற விரும்புகின்றவர்கள் 75, யமுனா வீதி, நல்லூரில் அமைந்துள்ள தென்னை நாற்று மேடையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், தென்னை நடுகை உரமிடுதல் போன்ற இலவச ஆலோசனைகளையும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் கமநல சேவை நிலையம், நல்லூரில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ. சத்தியேந்திரனிடம் பெற்றுக் கொள்ளலாம் எனஅறிவிக்கப்படுகிறது. (க)

# தீவக மக்களின் தாயகம் நோக்கிய பயணத்தை உணர்த்தும் நிகழ்வு

## நூல்வெளியீட்டு விழாவில் இளம்பரிதி

யாழ்ப்பாணம், டிச. 15

''இடம்பெயர்ந்த தீவக மக்களின் தாயகம் நோக்கிய பயணத்தை உணர்த்தும் நாளாக இந்நூல் வெளியீட்டு விழா அமைகிறது''

கலாநிதி கா. குகபாலனின் ''தீவகம் வளமும் வாழ்வும்'' நூல் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

தீவகக் கோட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் கடந்த 11ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி விழாவுக்கு யாழ். பல்கலைக்கழகப் புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமை வகித்தார்.

திரு. இளம்பரிதி மேலும் பேசும்போது கூறியதாவது:

தீவக மக்கள் திரும்பிச் செல்லவேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

மனிதவளம், இயற்கை வளங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பே வாழ்வு என்பதை வெளிப்படுத்தும் ஆரோக்கியமான சமூக பொருளாதார பண்பாட்டு இலக்கிய நூலாக, பல்வேறு தரவுகளைச் சொல்லும் வரலாற்று நூலாக இந்தநூல் வெளிவந்துள்ளது.

இந்த நூலைத் தந்ததன் மூலம் கூட்டுறவு ஒன்றியத்தின் சமுதாயப்பணி பன்முகப்படுத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

தீவகக்கோட்டக் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. ப. கனகலிங்கம் பேசும்போது கூறியதாவது:

உயர்ந்த பண்பாடும் நாகரிகமும் கொண்டு சிறந்த வாழ்க்கையை நடத்தியவர்கள் தீவக மக்கள். தீவகம் குறித்து இடைக்கிடை சிலர் தொட்டுக்காட்டினாலும் அது குறித்த பூரண தகவல்களைக் கொண்ட நூல்கள் வெளிவரவில்லை. அந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையில் பல்வேறு குறிப்புக்களுடன் வெளிவந்துள்ள இந்நூல் எதிர்காலத்தில் எமது வளம் குறித்த ஆய்வுகளுக்கு உதவும். இவ்வாறு அவர் கூறினார்.

வட இலங்கை சர்வோதயத் தலைவர் திரு. க. திருநாவுக்கரசு, யாழ். பதில் அரசாங்கஅதிபர் திருமதி தி. பத்தினியம்மா, பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, செஞ்சோலை பொறுப்பாளர் திரு. செஞ்சோழன், யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன், பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச. தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம், கலாநிதி கா. குகபாலன் உட்பட பலர் பேசினார்கள்.

பதில் அரச அதிபர் திருமதி பத்தினியம்மாவிடம் இருந்து இளைப்பாறிய அதிபர் திரு. சி. இராசரத்தினம் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை வேலணை பல. நோ. கூ. சங்கத் தலைவர் திரு பொ. மாசிலாமணி ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள். (க-111)

## புலிகளின் குரல் வானொலியில்

15 — 12 — 1994

வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்.
- ★ 8-10 — சித்தமருத் துவக்குறிப்புகள்.
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''நிரந்தரமாக கஷ்டப்பட வேண்டிய நிலை வேண்டாம்'' தனிநடிப்பு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ஏட்டிலிருந்து - 23-10-1994 விரகேசரி சஞ்சிகையிலிருந்து 'சமாதானமே தேவை, உரிமைகள் அதற்கு உரமூட்ட வேண்டும்' எனும் கட்டுரை
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

16 — 12 — 1994

வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## கொள்ளையில் சிப்பாய்

கொழும்பு, டிச. 15

அண்மையில் வியாங்கொடையில் இடம்பெற்ற சுமார் 80 லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவத்தை இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய் ஒருவரே தலைமை வகித்து நடத்தினார் என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

சமாதானப் பேச்சுக்கள் பற்றிய

## காரசாரமான விவாதம் கைகலப்பில் முடிந்தது!

### கொழும்பு ஹோட்டலில் சம்பவம்

கொழும்பு, டிச. 15

சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிய விவாதம் கைகலப்பில் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடந்த ''கொக்ரெயில்'' விருந்தின்போது கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவருக்கும் முன்னர் அரச நிறுவனமாகவிருந்து பின்னர் தனியார் மயப்படுத்தப்பட்ட பெரிய நிறுவனம் ஒன்றின் நிர்வாக இயக்குநருக்கும் இடையே இவ் விவாதம் இடம்பெற்றதாகவும்—

விவாதத்தின் உச்சகட்டமாக கைகலப்பு இடம்பெற்றதாகவும் சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

தம்மை அக்கடற்படை அதிகாரி தாக்கிவிட்டதாக அந்த நிர்வாக இயக்குநர் செய்த முறைப்பாட்டை அடுத்து இச்சம்பவம் பற்றி விசாரிக்க விசாரணைச்சபை ஒன்றை கடற்படைத் தலைமைப்பீடம் நியமித்துள்ளது. (ஐ-எ)

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை:

## விடைத்தாள் திருத்தும் பணி 23 ஆம் திகதி ஆரம்பம்

வலிகாமம் தெற்கு, டிச.15

நடந்து முடிந்த ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விடைத் தாள்களைத் திருத்தும் வேலைகள் கொழும்பில் இம் மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன. ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை மேற்படி விடைத்தாள் திருத்தும் வேலைகள் நடைபெறும்.

விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட உள்ள பிரதம பரீட்சகர்கள், கட்டுப்பாட்டாளர்கள் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் இம் மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறும், (இ-152)

## வண்ணை சிவன் கோயிலில் 3 நாள் திருவாசக விழா

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்களுக்கு திருவாசகப் பெருவிழா நடைபெறவுள்ளது.

மூன்று நாட்களும் மாலை 5-30 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மங்கள இசை, பாடசாலை மாணவர்களின் திருவாசகம் ஓதல், சிறப்புச் சொற்பொழிவுகள், இன்னிசை மற்றும் பண்ணிசைக் கச்சேரிகள் என்பன மூன்று நாள் விழாவிலும் இடம்பெறவுள்ளன. (ஐ)

# இந்திய லோகசபைக்கு திடீர் தேர்தல் இல்லை!

## இந்திரா காங்கிரஸ் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 15

இந்திய நாடாளுமன்றத்துக்கு திடீர்ப்பொதுத் தேர்தல் நடத்தப்படமாட்டாது. அதற்கான தேவை ஏற்படவில்லை என்று ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் உத்தியோக பூர்வ பேச்சாளர் வி. என். காட்கில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

நடந்து முடிந்த சட்ட சபைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் அடைந்த தோல்வி நாடாளுமன்றத்துக்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்ற தேவை ஏற்படுத்தவில்லை என்றும் அவர் சொன்னார்.

சட்டசபைத் தேர்தல் தோல்வி பற்றி ஆராய்ந்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் திடீர்பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவது பற்றிய விவகாரம் விவாதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைக் களையவும் மக்களின் நம்பிக்கையை மீண்டும் வென்றெடுக்கவும் காங்கிரஸ் கட்சி முழுமூச்சுடன் ஈடுபடும் என்றும் அவர் கூறினார். (எ)

## நீர்வள மேம்பாட்டு சபை விரைவில் அமைக்கப்படும்

எமது பிரதேசத்தில் கிடைக்கும் நீர்வளத்தைப் பேணிக் காத்து, உச்ச பயன்பாட்டை அடைவதற்காக நீர் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளையும் ஒன்றிணைக்கும் நோக்கோடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையில் துறை சார்ந்த நிபுணர்களின் ஒன்று கூடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்ட அந்தக் கலந்துரையாடலில் நீர்வளமேம்பாட்டு சபை என்ற பெயரில் நீர்வள அபிவிருத்திக்கும் பயன்பாட்டுக்கும் பொறுப்பான ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கு கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சபையை அமைப்பதற்கான யாப்புகள், செயற்பாட்டு வரையறைகள், முன்னுரிமை வழங்கும் திட்டங்கள் போன்றவற்றை ஆராய்வதற்கான குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது

நீர்வள அபிவிருத்தியில் ஈடுபடும் ஆர்வமும் கொண்ட பொதுமக்களிடமிருந்து, நீர்வளம் தொடர்பான ஆவணங்களின் பிரதிகள், தகவல்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன. மேலதிக தகவல்கள் தர விரும்புவோரும் பெறவிரும்புவோரும் கொக்குவில் செம்பியன்லேனில் உள்ள உட்கட்டுமானப் பகுதியுடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்போதைய நெருக்கடிகளிலிருந்து அரசு மீள மீண்டும் பொதுத்தேர்தல் நடத்துவதே ஒரே வழி!

1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ. தே. க. 50.9 வீத வாக்குகளைப் பெற்ற போதும் நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு ஆசனங்களைக் கைப்பற்றியது. அப்போது நடைமுறையில் இருந்த அரசமைப்பு அதன் பின்னரே மாற்றி அமைக்கப்பட்டது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு 61 சதவீத வாக்குகள் கிடைத்தபோதும் நாடாளுமன்றத்தில் ஒரேயொரு மேலதிகஆசனமே கிடைத்துள்ளது. ''ராவய'' என்னும் சிங்கள வார இதழில் இது தொடர்பாக வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரமாகிறது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தால் அரசமைப்புக்குத் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள 'ஒத்துழைப்பை வழங்குவோம் என ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குத் தெரிவித்திருந்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள்ள உண்மையான பெரும்பான்மை பலம் (ஒரு அங்கத்தவர்) இருந்தவாறே இருக்க ஜனாதிபதி முறையை ஒழிக்க ஒத்துழைப்பை வழங்குவோம் என ஐ. தே. கட்சி கூறியது ஓர் அரசியல் தந்திரமாகும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இந்தப் பொறியில் சிக்கவிருந்தது. இருப்பினும் இறுதியில் தப்பிப் பிழைத்தது.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இல்லாத நிலையைப்போக்கி தனக்குக் கிடைத்துள்ள அளப்பரிய மக்கள் சக்தியைப் பயன்படுத்தி ஸ்திரமான அரசு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு உள்ளது.

இருப்பினும் புதிய ஜனநாயக அரசமைப்பை உருவாக்குவது தொடர்பாக உள்ள தடைகள் இலகுவானவைகளாகத் தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்குக் கிடைத்த மக்கள் ஆதரவை நாடாளுமன்றத்தின் ஊடாக செயற்படுத்த முடியாத நிலையே அரசுக்கு முகிய சவாலாக அமைந்துள்ளது.

### தொண்டமானை நம்பமுடியுமா?

தற்போதுள்ள நிலையில் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணையும் வரை அதற்கு நாடாளுமன்றத்தில் ஒரேயொரு மேலதிக ஆசனம் மட்டுமே இருந்தது.

## தொண்டா ஆதரவு உறுதியானதல்ல

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகள் சாதாரணமாக ஒத்துழைப்பை வழங்கும் போக்கை அனுசரித்தாலும் அவர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் பங்காளர்களாக இல்லாத காரணத்தினால் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவை வழங்குவார்கள் எனக் கூறமுடியாது.

தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்த பின்னர் நாடாளுமன்றத்தில் உள்ள பலத்தில் அரசுக்குச் சார்பாக மாற்றமேற்பட்டுள்ளது என்பது உண்மையே.

இருப்பினும் இம்மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பெரும்பான்மை அவ்வளவு அதிகமானதொன்றல்ல. அவ்வாறே அவர்களின் இணைப்பானது சட்டப்பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. சில சமயம் தொண்டமான் பொது மக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிக்கும் விடயம் நீதிமன்றம்வரை சென்று அதன் தீர்ப்பின்படியே அமையவும் கூடும்.

அவ்வாறு நிகழ்ந்து நீதிமன்றத்தின் தீர்ப்பு சாதகமாகக் கிடைக்கும்வரை இ. தொ. கா. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்ததால் ஏற்பட்ட மாற்றத்தை எவ்வளவுக்கு உறுதியானது என முன்கூட்டியே கூறமுடியாது.

புதிய அரசமைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைத்து ஜனாதிபதி முறையை ஒழித்து அதை நாடாளுமன்ற முறையிலான அரசியல் முறைக்கு மாற்றி வதால் அரசாங்கத்துக்கு [illegible] தனது நடவடிக்கைகளை வலு[illegible] ளக்கூடிய பலம் இருக்குமெனக் கூறமுடியாது.

தொண்டமான் இணைந்தால் அரசுக்கு மேலதிகமாக ஒன்பது ஆசனங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. தொண்டமானின் இணைப்புக்கூட தீர்க்கமான பேச்சுவார்த்தையின் முடிவில் ஏற்பட்டதொன்றல்ல. அவசர காலத்தில் மேற்கொள்ளப்பட்டதொன்றாகும்.

தொண்டமான் அரசாங்கத்தில் இணையும் வேளைவரை கூட அவரது காங்கிரஸைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் ஐ.தே. கட்சியுடன் கூடிக் குலாவியதை மறந்து விட முடியாது.

மறுபுறத்தில் ஐ.தே. கட்சியுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவான இ.தொ.கா அங்கத்தவர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து சட்டபூர்வமானதா என்ற விடயத்துக்கான இறுதித் தீர்ப்பை நீதிமன்றமே வழங்கும்.

### கூட்டணி ஈ. பி. டி. பி. நிலை என்ன?

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி. அமைப்பினர் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்காதபடியால் அவர்களால் தற்போது வழங்கப்படும் பொதுவான ஆதரவு நாட்டில் ஏற்படும் மாற்றங்களுக்கு அமைய தொடர்ந்தும் வழங்கப்படுமா என்பதை முன்கூட்டியே கூற முடியாது.

ஆகவே இன்றைய நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதை முற்றாக நிராகரித்து அரசமைப்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அதனால் லாபம் அடையப் போவது ஐக்கிய தேசியக்கட்சியே ஒழிய பொது மக்கள் ஐக்கிய முன்னணி அல்ல.

அரசமைப்பில் மாற்றங்களை மேற்கொள்வதுடன் தேர்தல் நடைமுறைகளிலும் மாற்றங்களை மேற்கொண்டு மீண்டும் பொதுத் தேர்தலை நடத்துவது அதிக செலவு ஏற்படக் கூடிய நடவடிக்கையாயினும் தேர்தல் சட்டத்திலுள்ள விவகாரங்களை நேர்சீர் செய்வதற்கு—

மக்கள் அளித்த பேராதரவை நாடாளுமன்றத்துக்குள்ளும் பிரதிபலிக்கச் செய்து நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும்— மீண்டும் தேர்தலை நடத்துவது தேவையானதொன்றாகும்.

எந்த வகையில் பார்த்தாலும் தற்போது நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளின் பலம் மக்களின் தீர்ப்பைப் பிரதிபலிக்கிறது எனக் கூற முடியாது.

### தேர்தலை நடத்துவதே ஒரேவழி

1977 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 50.9வீத வாக்குகளே கிடைத்தன. இருப்பினும் நாடாளுமன்றத்தில் அக்கட்சிக்கு ஆறில் ஐந்து வீதமான ஆசனங்கள் கிடைத்தன.

அப்போதிருந்த அரசமைப்பை மாற்றி ஜனாதிபதி முறையை அக்கட்சி உருவாக்கியது. ஆனால் கடந்த தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு 61வீத வாக்குகள் கிடைத்துள்ளன. இருப்பினும் நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை இருட்டில் தடவும் நிலையே.

பொதுமக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளின்படி புதிய தேர்தல் முறையை அனுசரிப்பது அரசின் புதிய புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான தொன்றாகும்.

எனவே இதைக் கருத்திற் கொண்டு ஏற்படும் செலவினைப் பெரிதாகக் கருதாது நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி அதில் வெற்றி பெறுவதைத் தவிர மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேறெந்த அணுகுமுறைகளும் இருப்பதாகத் தெரியவில்லை. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சகல விடுமுறை நாட்களும் (தமிழீழம் உட்பட) அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் ரூபா 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம் பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [33928]

**SPOKEN ENGLISH**

விரிவான விளக்கத்துடன் Spoken English with Grammar கற்பிக்கப்படுகிறது. ஆரம்பம்: 16-12-1994 V. N. Kandasamy A I B Part I (London), Inter (London) Dip - in - English இல. 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். (8079)

**காணி விற்பனைக்கு**

சுண்டிக்குளி கொழும்புத் துறை வீதியில் பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில் கிணறு, மூன்று பக்க மதிலுடன் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K. சிவசுப்பிரமணியம், பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி. (34053)

**மணமகன் தேவை**

கௌரவமான இந்துக் குடும்பம், சைவபோசனம் வயது 34, உயரம் 5' 2" கணக்கியல் பட்டதாரி (C. I. M. A.) செவ்வாய் தோஷமில்லை. அத்த நட்சத்திரம். இவருக்கு நல்லொழுக்கமுள்ள மணமகன் தேவை. வெளிநாட்டிலுள்ளவரும் தொடர்பு கொள்ளலாம்: இல. 958, உதயன் மே/பா நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (8080)

**தவறிவிட்டது**

கடந்த சனி இரவு ஔவி பயணத்தின்போது அடையாள அட்டை, சொற்ப பணத்துடன் பேர்ஸ் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இ. ராஜினி, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (34194)

**அப்பியாசக் கொப்பி**

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936)

**ரி. வி. டெக் திருத்துதல்**

சகல றேடியோக்கள், ரி. வி. டெக், எல்லாவிதமான மணிக்கூடுகளையும் பழுதுபார்த்துக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-991 1)

## கிக்ஸ்

அக்கடமி
தாவடி.
Spoken English
By
**BRITTO**
புதிய பிரிவு
ஆரம்பம்:
**15-12-1994**
இன்று காலை 9-30 மணிக்கு
(8081)

## விசேட பொதுக் கூட்டம்

**S. R. A. M. O. (T. U - 361)**
யாழ். கிளை

தாய் சங்க நடவடிக்கை தொடர்பாக விவாதிப்பதற்காக **18 - 12 - 1994** ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய மருந்துக் களஞ்சிய மேல்மாடியில் கூட்டம் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறேன்.

ந. சர்வானந்தா,
தலைவர்.

(34196)

நத்தார் புது வருடத்தை முன்னிட்டு
**05-12-94** தொடக்கம் **31-12-94** வரை

## மலிவு விற்பனை

சகல விதமான புடைவைகளுக்கும்
விசேட கழிவுண்டு
வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்

## லைடன் புடைவை நிலையம் (நிவகம்)

249, இராசன் வீதி (மின்சார நிலைய வீதி), யாழ்ப்பாணம்.

(சி-9924)

## வியாபாரிகளுக்கு

கிறிஸ்மஸ் கொண்டாட்ட

- ✶ எவர் சில்வர்
- ✶ பிளாஸ்ரிக் பொருள்களையும்

— மற்றும் —

- ✶ தையல்
- ✶ பாடசாலை உபகரணங்கள்
- ✶ றேடியோ
- ✶ கைக்கடிகாரங்கள்
- ✶ பொலித்தீன் வகைகள்
- ✶ அழகு சாதனப் பொருள்கள்

— அனைத்தையும் —

மொத்தமாகப் பெற்றுக் கொள்ள
விரையுங்கள்!

## ஜெயா அழகுமாடம்

187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சில்லறை வியாபாரம்:
177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-9825]

**ROYAL INSTITUTE**
(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)
மானிப்பாய்

SPOKEN ENGLISH
BY:
**Mr. BRITTO**
புதிய பிரிவு
ஆரம்பம்:
**17 - 12 - 94**
சனி 1-30 p. m.
[34186]

**1995இற்கு**
உபயோகம் மிக்க ஒரு கலண்டரை மலிவு விலையில் பெற

## ஆனந்தா

பஞ்சாங்கக்
**கலண்டர்**

நாள், திதி, நட்சத்திரம், யோகம், கோயில் தினங்கள், விடுமுறை நாட்கள் யாவும் அடங்கியது.

விலை ரூபா 30/- மட்டும்
(சி-9950)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 08 | 16 |
| — | — |
| 04 | 12 |
| — | — |
| 1922 | 1993 |

அமரர்
**கணபதிப்பிள்ளை கயிலாயநாதன்**
B. A. Dip- in-Ed

கல்வியிற் சிறந்தோனாகி கலா நிலையம் நிறுவி
நல்லன பலவும் எண்ணி நாளும் அதனைச் — செய்து
சொல்வன பலவும் செய்ய சோர் விலா துழைத்த
வல்ல நற் கயிலாய நாதன் வாழ்வினை நீத்த நாளின்று

நன்றியுடன் நினைவு கூரும்;
பழைய மாணவர்கள்.

கலா நிலையம்,
வட்டுக்கோட்டை.

## நிரு ரியூசன் சென்றர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

பட்டப்படிப்புகளுக்கான
விரிவுரைகள்

## G.A.Q.

பேராதனை, யாழ்ப்பாணம்.

மேற்படி கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

மாணவர்கள் உடன் அனுமதிகளைப் பெறவும்.

யாழ். முன்னணி விரிவுரையாளர்களின்
ஒன்றிணைந்த சேவை

**B. A.** பகுதி - I
**B. A.** பகுதி - II ) யாழ்ப்பாணம்

[சி-9942]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**94** பரீட்சையில் தோற்றியவர்க்கான
மீட்டல் **SAT - SUN**
வகுப்புக்கள்

ஆரம்பம்: **18 - 12 - 1994**
காலை 8-00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| வர்த்தகம் | — | திரு. வரதன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| இந்து நாகரிகம் சமயம் | — | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| அரசியல் | — | திரு. சிலன் |
| கிறிஸ்தவம் | — | திரு. தனேஸ்வரன் |
| நாடகமும், அரங்கியலும் | — | திரு. சத்தியா |
| வரலாறு | — | பிரபல ஆசிரியர் |

அனுமதிகளை முன்கூட்டியே
பெற்றுக் கொள்ளவும்

[சி-4]

யாழ். அடைக்கல அன்னை ஆலய



## நத்தார் விற்பனை

நாளை **(16 - 12 - 1994)** ஆரம்பம்
17ஆம், 18ஆம் திகதிகளிலும்

✶ சிறுவர் ✶ இளைஞர்
✶ வளர்ந்தோர் ✶ முதியோர்

சகலருக்கும் உகந்த
அனைத்துத் தேவைப் பொருள்களும்
மற்றும்

✶ சிற்றுண்டி வகைகள்
✶ தித்திக்கும் குளிர்களி, குளிர் பானங்கள்

மற்றும் சிறுவர்களுக்கான
விளையாட்டுக்கள்
இன்னும் பல......

எல்லாம் மலிவு விலையில்

ஆரம்பம்: **16 - 12 - 1994**
வெள்ளி முற்பகல் 10 மணி

விளம்பர அன்பளிப்பு:

## பி. ஐ. பர்னான்டோ



542, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

[சி-9827]

## மேல்மாகாண ஆளுநராக ஸ்ரான்லி திலகரத்தினா?

மேல்மாகாண ஆளுநராக முன்னாள் சபாநாயகர் ஸ்ரான்லி திலகரத்தினா நியமிக்கப்படலாம்.

இப்பதவிக்கு வேறு இருவரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் ஜனாதிபதி சந்திரிகா ஸ்ரான்லி திலகரத்னாவையே நியமிக்க முடிவு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஆண் தாதி தேவை

**G. C. C. வைத்திய நிபுணர்**
**ஆலோசனைக் கூடம்**

514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(பழைய O P Dக்கு முன்பாக)

எமது ஸ்தாபனத்துக்கு ஓய்வு பெற்ற ஆண் தாதி (Male Nurse) தேவை. தகுதியானவர்கள் சான்றிதழ்களுடன் 19-12-1994 காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

— நிர்வாகம்.

(8083)

## NEW SCIENCE HALL

KANNATHIDDY, JAFFNA.

## DAY CLASS

(94 A/L பரீட்சைக்குத்
தோற்றிய மாணவர்களுக்குரியது)

**PHYSICS - CHEMISTRY**
**BOTANY - ZOOLOGY**
**PURE/APP- MATHS**

✶ எமது வழமையான ஆசிரியர் குழு ✶

ஆரம்பம்:- **15-12-1994**
வியாழன் காலை **10.00** மணி

(சி/9823)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக பிரிவுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**94** பரீட்சையில் தோற்றிய மாணவர்க்கான
மீட்டல் **DAY CLASSES**
ஆரம்பம்: **19-12-94** (8.00-2.00 மணி)

- ✶ ECO. — திரு. இராஜேஸ்வரள்
- ✶ ACC. — S. K. பிரபாகரன்
- ✶ LO. — திரு. A. பிரபா
- ✶ COM. — திரு. சிவப்பிரகாசம்

- ● வாரத்தில் நான்கு நாட்களும் நடைபெறும்.
- ● அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
- ● பிரிவு - I நடைபெறுகின்றன.

[சி-2]

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
(நெல்லியடி, உடுப்பிட்டி உப அலுவலகங்கள்)
**1987-ம் ஆண்டின் 15ஆவது இலக்க**
**பிரதேச சபைகள் சட்டம்**
**ஆதனவரி பற்றிய**

## அறிவித்தல்

1995ஆம் ஆண்டிற்கான ஆதனவரிக்கான மதிப்பீடும் ஆதனவரி அறவீட்டு விகிதமும் இவ்வாண்டுள்ளவாறே மாற்றமின்றி இருக்கும். 1995ஆம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித்தொகையை ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோரிற்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31, ஏப்ரல் 30, ஜூலை 31, ஒக்ரோபர் 31க்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்கான வரி முறையே 31-03-95, 30-06-95, 30-09-95, 31-12-95 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தத் தவறுமிடத்து, குடியிருப்பு ஆதனங்கள் மீது பற்றாணைக் கட்டணமாக 15%மும் வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20%மும் அறவிடப்படும்.

ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது. ஆதன உரிமையாளர்களும் அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகத்துடன் தொடர்புகொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

செ. ஶ்ரீநிவாஸன்,
விசேட ஆணையாளர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி,
12-12-1994.

[சி-9828]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்


## உயர்தர பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெளியான ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகள் சுமாரானவை, கடந்த வருடத்தைவிட முன்னேற்றமானவை என்று கல்வி வட்டாரங்களில் திருப்தி தெரிவிக்கப்பட்டது.

பிரபல கல்லூரிகள், நகரப்புறப் பாடசாலைகளைப் போலவே கிராமப்புறப் பாடசாலைகளும் சராசரியாக இம்முறை சிறந்த முடிவுகளைப் பெற்றுள்ளன. பெயர்பெற்ற பாடசாலைகளின் முடிவுகள் வள வசதி ஒப்பீட்டு ரீதியில் மத்திமமாக இருக்க, கிராமப் பாடசாலைகளின் முடிவுகள் உத்தம நிலையில் உள்ளதையும் அவதானிக்க முடிகிறது. இடம்பெயர்ந்து இயங்கும் பாடசாலைகளும் மனம் சோராது முயற்சியின் பயனாகத் தமது திறமையைக் காட்டியுள்ளன.

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் கிராமப் பகுதிப் பாடசாலைகள் கல்வி வளர்ச்சி கண்டுள்ளதை மட்டுமன்றி, நகரப் பாடசாலைகள், பிரபல பாடசாலைகளில் கல்வி பயின்றால் மட்டுமே சிறப்பான பெறுபேறுகள் பெறமுடியும் என்று பெற்றோர்கள் மத்தியில் நிலவும் ஒருவித மாயையையும் போக்க உதவும். இதனை நகர — கிராம கல்வி வளர்ச்சியை சமனாக்கும் நோக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதற்கான ஆரோக்கியமான நிலை என்றும் கொள்ளலாம்.

போர்ச் சூழ்நிலையிலும் தமிழர்கள் தமது கல்வி முயற்சியை கைவிட்டு விடவில்லை; மண்ணெண்ணெய் விளக்கில் படித்த போதிலும் கல்வித் தேடலை மறந்துவிடவில்லை; வசதியின்மைகள், குறைபாடுகள், பூர்த்தி செய்யப்படாத தேவைகள் ஆகியவற்றின் மத்தியிலும் தமது திறமையை மழுங்கிப்போக விடவில்லை; என்பதையே பரீட்சை முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

பழைய அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக இராணுவ மற்றும் அரசியல் அழுத்தங்களையும், நெருக்குதல்களையும் கொடுத்து அவர்களின் பல உரிமைகளைப் பறித்தது. அவற்றுள் மிக முக்கியமானது கல்வி வசதி. தமிழர்களைக் கல்வித்துறையில் நசுக்குவதன் மூலம் அவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்துவிட வேண்டும் என்பதே அதன் உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது.

இதனை ஒரு சவாலாகக் கருதி, தமிழ் மாணவர்கள் பல வசதியீனங்களுக்கு மத்தியிலும் தமது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்துள்ளனர். குறைந்த வளங்கள், வசதியீனங்கள் ஆகியவற்றுக்கும், இராணுவத் தாக்குதல்களால் உண்டாக்கப்பட்ட மனப்பதற்றம் என்டனவற்றுக்கும் எதிராக நீச்சல் அடித்து, அகில இலங்கை மட்டத்திலும் சில சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறார்கள்.

பேரினவாத போக்குடைய சிங்களவர்கள் இது குறித்துப் பொறாமை கொள்ளவும் செய்வர்.

மறுபுறத்தில், தமிழ் மாணவர்களின் திறமையை வெட்டி வீழ்த்தி, அவர்களின் உயர் கல்வி வசதியைத் தடுப்பதற்கு வெட்டுப் புள்ளி காத்திருக்கிறது என்பதனையும் மறந்துவிடுவதற்கில்லை!

நீதியின் பிரகாரம், போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மாவட்டங்கள் எல்லாமே கல்வி வசதியும், வளங்களும் குன்றியவை என்றே கணிக்கப்பட வேண்டும். ஆனால் கடந்த அரசு அவ்வாறு செய்யவில்லை.

யுத்தத்தின் அனர்த்தங்களையும், மக்களுக்கு உண்டான பாதிப்புகளையும் ஓரளவேனும் உணர்ந்த மனிதாபிமானப் போக்கு புதிய அரசிடம் காணப்படுகிறது. அந்த வகையில், தமிழ் மாணவர்களுக்கு உண்டான கல்விப் பாதிப்புக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலாவது பல்கலைக்கழக அனுமதியில் வெட்டுப்புள்ளி விவகாரத்தில் சில சலுகைகளை வழங்க முன்வர வேண்டும்.

இது குறித்து புதிய அரசும், புதிய கல்வி அமைச்சரும், புதிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் சிந்திக்குமா?

சர்வதேசக் கடலில் வைத்து

# புலிகளின் கப்பல்களை அழிப்பதற்கு இந்திய அரசின் அங்கீகாரம் தேவை

## கடற்படை அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, டிச. 15

சர்வதேசக் கடலில் செயற்படும் விடுதலைப் புலிகளின் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டத்துக்கு இந்திய அரசாங்கம் அங்கீகாரம் அளிக்கும் பட்சத்தில் மட்டுமே அக்கப்பல்களை செயலிழக்கச் செய்ய முடியும் என்று கொழும்பு வந்த இந்திய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1991 நவம்பரில் விடுதலைப் புலிகளின் ரொங்கொனோவா கப்பல் அழிக்கப்பட்டதற்கும் பின்பு விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு பயணம் செய்த அஹத் கப்பல் அழிக்கப்பட்டதற்கும் தாங்களே காரணம் என்று அண்மையில் கொழும்பு வந்திருந்த போது இந்த கடற்படை அதிகாரி தெரிவித்ததாக சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கப்பல்களுக்குரிய பெயர்கள் மாற்றப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. முன்னர் இல்யானா, கோலைன், சன்பேர்ட், பேத்தியா, கோல்டன் பேர்ட் ஆகிய பெயர்களில் கப்பல்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வந்தனர்.

இலங்கையில் இந்திய அமைதிப்படை செயல்பட்டு வந்த சமயத்தில் இல்யானா என்ற பெயரிலான விடுதலைப் புலிகளின் கப்பல் பர்மாவில் ரங்கூன் துறைமுகத்தில் 'தரித்து நின்றதாக இந்திய ராணுவ ஜெனரல் தெபிந்தர்சிங் தெரிவித்திருக்கிறார்.

ஜெனரல் தெபிந்தர் சிங் இலங்கையில் இந்திய இராணுவத்தை தலைமை வகித்து நடத்திய தளபதியாவார். (இ-எ)

# யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசளிப்பு விழா சனியன்று

யாழ்ப்பாணம், டிச 15

யாழ். இலக்கிய வட்டத்தின் 93 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களுக்குரிய பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நாவலர்மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மூதறிஞர் வரதரும் மூத்த எழுத்தாளர் சு. வேயும் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பர்.

வண்ணை சே. சிவராஜா வரவேற்புரை நிகழ்த்துவார். தொடர்ந்து சித்தாந்த சரப ஞானப்பிரகாசசிவம், கலாநிதி க. கனகராசா ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெறும். தலைமையுரையை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நிகழ்த்துவார்.

சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

பரிசளிப்புரையை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் வழங்குவார். (ஐ)

## கலந்துரையாடல்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளி முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அத்தியாவசிய பொருள்களை எடுத்துவருவது தொடர்பான ஏற்பாடுகள் குறித்து அதில் கலந்துரையாடப்படவுள்ளது.

# பூநகரிப்பாதை குறித்தும் அரசு ஆராய்கிறது!

கொழும்பு, டிச. 15

பொது மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு சங்குப்பிட்டிப்பாதையை திறப்பது பற்றிய சாத்தியக் கூறுகளை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய பிந்திய செய்தியில் இத்தகவல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

ஆனையிறவுப் பாதையை சில நிபந்தனைகளுடன் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் தீர்மானித்திருப்பதாகவும் —

அந்த நிபந்தனைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வருவதாக ''சண்டே ஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-எ)

# அனுருத்தவின் வீட்டுக்கு வெளியே நடமாடிய 3 தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு, டிச. 15

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின்கொழும்பு வாசஸ்தலத்தின் வெளியே நடமாடியதாகக் கூறப்படும் மூன்று தமிழ் இளைஞர்களை அமைச்சருக்கு பாதுகாப்பு வழங்கி வரும் படையினர் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி மற்றும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் இம்மூவரையும் விசேட பொலீஸ் விசாரணையாளர்கள் குழு விசாரித்து வருகின்றது.

இந்த இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதிஅமைச்சரின் உயிருக்கு விடுதலைப் புலிகளினால் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக புலனாய்வு அறிக்கைகள்தெரிவித்ததை அடுத்து அவருக்கு வழங்கப்பட்டுவரும் பாதுகாப்புபலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மாணவர் அமைப்பின் நூல்கள் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 15

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் வெளியீடான 'இதய நாதம்', 'சுவடுகள்', 'எங்கள் தாய்த்திருநாடு' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நாளை வெள்ளி பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ந. இன்பன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்துவார். தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நூல்களை வெளியிட்டு வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் க. குணரட்ணம், கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் திரு. க. சண்முகநாதபிள்ளை, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் ஆகியோர் முதற் பிரதிகளைப் பெறுவர்.

கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன், கல்விமேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு. பிரான்ஸிஸ் யோசவ் அடிகள் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

மதிப்பீட்டு உரைகளை பேராசிரியர் சண்முகதாஸ், இயலிசை வாரிதி வீரமணி ஐயர், கலாநிதி சபா. ஜெயராசா அமுதகவிப் புலவர் திரு. ம. விக்ரர் ஆகியோர் வழங்குவர். (ஐ)

# சந்திரிகாவின் இந்திய விஜயம் ரத்தானது புலிகளுக்காகவா?

## இல்லை என்கிறார் கதிர்காமர்

கொழும்பு. டிச. 15

இம் மாதம் மூன்றாம் வாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் ரத்தானது ஏன்?

புலிகளைத் திருப்திப்படுத்தவா?

இல்லை என்கிறார் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர்.

இது தொடர்பாக அவர் ''சண்டே லீடருக்கு'' தெரிவித்ததாவது:–

டிசம்பர் 3ஆம் வாரத்தில் இந்திய பயணத்தை மேற்கொள்வது என்று ஒரு யோசனை இருந்தது. ஆனால் பயணம் இறுதியாக்கப்படவில்லை.

நாடாளுமன்றம் அடுத்த மாதம் 10ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்படவிருப்பதும் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டியிருப்பதும் காரணமாகவே ஜனாதிபதி தமது விஜயத்தை ஒத்தி வைக்க நேர்ந்தது என்றும் அவர் கூறினார். (இ–எ)

# மணலாற்றிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழரை மீண்டும் குடியமர்த்துக

## மனித உரிமைவாதி ஹென்ஸ்மன் கோரிக்கை

கொழும்பு, டிச. 15

வெலிஓயா (மணலாறு) போன்ற பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள் அங்கு மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும். அவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

மனித உரிமைவாதியான திரு. சி. ஆர். ஹென்ஸ்மன் ''சண்டே ஒப்சேர்வர்'' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெலிஓயா போன்ற பகுதிகளில் இருந்து இனரீதியான கொள்கைகளின் அடிப்படையில் தமிழர்களை வெளியேற்றி, அங்கு தமிழருக்கு எதிரான குடியேற்றத்திட்டங்களை அமைக்கும் கொள்கை கைவிடப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தமது கட்டுரையில் கூறியுள்ளார்.

சட்டபூர்வமான சொந்தக்காரர்களுக்கு இக்காணிகள் மீண்டும் வழங்கப்பட வேண்டும். நட்டஈடும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ–எ)

# லஞ்ச ஆணைக் குழு இன்று முதல் இயங்கும்

நிரந்தர லஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு இன்று முதல் செயல்பட ஆரம்பிக்கின்றது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று ஆணையாளர்களும் இன்று தங்கள் அலுவலகங்களுக்குச் சென்று பதவிகளை பொறுப்பேற்பர்.

இத்தகவலை நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் வெளியிட்டார்.

நிரந்தர ஆணைக்குழுவை ஆறு மாதங்களில் நியமிப்பதாக உறுதியளிக்கப்பட்டது; ஆனால் ஆறு வாரங்களில் அக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# கிளிநொச்சி இளைஞர் ஸ்ரீபெரும்புதூரில் கைது

கொழும்பு, டிச. 15

தமிழ் நாட்டில் ஸ்ரீ பெரும்புதூரில் ரோந்து சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று இலங்கை தமிழ் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் எஸ். மகேந்திரன் (29 வயது) என்ற இளைஞனே கைது செய்யப்பட்டவராவார்.

வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக தொலை பேசியுடன் இணைக்கப்பட்ட கருவி ஒன்றையும், வெளிநாட்டு தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய விவரக் கொத்து ஒன்றையும் அந்த இளைஞனிடம் இருந்து கைப்பற்றியதாக பொலீஸார் கூறினார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திஸ்ரீ பெரும்புதூரில் வைத்து கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தேசிய கல்விக் கொள்கை

கொழும்பு, டிச. 15

தேசியக் கல்விக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரானாவின் கோரிக்கை மீது இக்கொள்கை வகுக்கப்பட்டு வருவதாக தேசியக் கல்வி ஆணைக் குழுவின் தலைவரான பேராசிரியர்லக்ஷ்மண் ஜயதிலக தெரிவித்திருக்கிறார் (ஐ-எ)

வெளிநாட்டு முதலீட்டாளரை கவர

# ஜனாதிபதி தலைமையில் வர்த்தகத் தூதுக்குழு!

## அரசுக்கு ஆலோசனை

வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான வர்த்தகத் தூதுக்குழு ஒன்று வர்த்தக நாடுகளின் தலைநகர்களுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரபல தொழில் நிறுவனமான ''போர்ப்ஸ்'' மற்றும் வாக்கர்ஸின் தலைவர் அஜித் ஜயரத்னா இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

வார்த்தைகளால் ஒன்றுமே நடக்காது. சாதகமான நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும் என்றும் அவர் கூறினார். [ஐ-எ]

எந்த ஒரு தனி மனிதனும் ஆற்றாத சேவையை ஆற்றி

# கல்விப் பணிக்காக கணக்கில்லாது செலவு செய்தவர் சேர். இராமநாதன்

## சிலை திறப்பு விழாவில் பேச்சு

வலிகாமம்.தெற்கு டிச. 15

இலங்கையில் கல்விக்கு எந்த ஒரு தனிமனிதனும் ஆற்றாத சேவையினை ஆற்றி கல்விப்பணிக்காக கணக்கில்லாத செலவைச் செய்தவர் சேர். பொன். இராமநாதன். அவர் நினைவாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு ''இராமநாதன் பல்கலைக்கழகம்'' எனப்பெயர் சூட்டச் செய்ய வேண்டும்''

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற சேர். பொன். இராமநாதன் உருவச்சிலை திறப்புவிழாவில் பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையின் முன்னாள் அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது:–

இராமநாத வள்ளலின் நோக்கங்களை பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்க் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வளர்த்து, பண்ணிசை வாத்தியங்கள், சங்கீதம் போன்ற கலைகளை வளர்த்து எல்லோர் உள்ளங்களிலும் நிலையான இடத்தை பெற்றுள்ளது இக்கல்லூரி.

சேர் பொன். இராமநாதனைப் போல சைவத்துக்கும் தமிழுக்கும் பாடுபட்ட இந்து போர்ட் இராசரட்ணம் அவர்களுக்கும் சிலை நிறுவுவது அவசியம்— என்றார்.

யாழ்ப்பாணம்இராமநாதன் நுண்கலைக்கழக பீடாதிபதி கலாநிதி சபா. ஜெயராசா கூறியதாவது:–

இராமநாதனின் கல்விச் சிந்தனைகளை — சமயப் பணிகளை — வியந்துரைக்கும் வகையில் அவருக்கு இன்று சிலை அமைக்கப்பட்டுள்ளது.

கல்விக் கொள்கையில் இன்னும் நாம் இலக்கக்காட்டுருவை மையமாகக் கொண்ட பாடவிதானத்தையே கடைப்பிடித்து வருகின்றோம். மேலை நாடுகளில் இவை கைவிடப்பட்டு, செயற்பாட்டு முறை காட்டு முறையை அறிமுகம் செய்துள்ளார்கள்.

இன்று அவர்களால் பின்பற்றப்படும் செயற்பாட்டு முறை காட்டுருவை எமது நாட்டில் முன்னோடியாக இராமநாத வள்ளல் அன்றே அமைத்துத் தந்துள்ளார் அவரின் பாடவிதான அமைப்புக்களை நாம் பின்பற்ற வேண்டும். ரவீந்திரநாத்தாகூர் அறிவுக் கூடமாக சாந்திநிகேதனை அமைத்தது போல இராமநாதனும் பெண்களுக்கென இக்கல்விக் கூடத்தை அமைத்துள்ளார் என கூறினார்.

வலிகாமம் [illegible] வில்— மேலதிக அரசாங்க

அதிபர் திரு ஆ. மகாலிங்கம் கூறியதாவது:–

இராமநாதன் இக்கல்லூரிக்கு மட்டுமல்ல; அகில உலகிற்குமே சொந்தமானவர் இந்த நாட்டின் ஒரு தேசிய வீரனாக, ஞானியாக— சட்டவல்லுனராக அவர் விளங்குகிறார்.

கற்றவர் பிரதிநிதியாக சட்ட நிருபண சபையில் அவர் ஆற்றிய உரை அவரை ஒரு மனிதாபிமான மிக்கவராக— ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக காட்டியது. அந்நியருக்கு எதிரான கருத்துக்களை அவர்கள் ஆட்சியிலேயே துணிந்து தெரிவித்தவர் என்றார்.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது ஆசி உரையில் கூறியதாவது:–

இராமநாதன் வாழ்ந்த காலத்து சூழ்நிலைவேறு. இன்றைய சூழ்நிலை வேறு. இருப்பினும் அவரது குறிக்கோள்கள் தவறாமல், இக்கல்லூரி இன்றும் பணியாற்றி வருகிறது.

லீலாவதி சீமாட்டி பட்டம் பெற்றுவந்த போது நிகழ்ந்த வரவேற்பு நிகழ்வை இன்றைய இந் நிகழ்வு நினையூட்டுகிறது. திக்கெட்டும் ஒலிக்கின்றது இராமநாமம். அவரின் குறிக்கோளை அடிப்படையாக கொண்டு பாடசாலையும்— பாடசாலை அபிவிருத்தி சங்கம்— பழைய மாணவர் சங்கம் என்பனவும் [illegible] குரியது — என்றார். (இ-152)

# மத்தியவங்கி அடிப்படை உரிமைகளை மீறியதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு

## 10 ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்க உத்தரவு

மத்திய வங்கி அதன் சில ஊழியர்களுக்கு உத்தியோகத்தர் தரம் ஒன்றுக்கான பதவி உயர்வுகளை வழங்கும் விடயத்தில் அடிப்படை உரிமைகளை மீறியிருப்பதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக 10 ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்குமாறும் மத்திய வங்கிக்கு உயர் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நான்கு மனுதாரர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாவும், ஆறு மனுதாரர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாவும் இழப்பீடாக வழங்கப்படவுள்ளது.

பத்து மனுதாரர்களும் மத்திய வங்கியின் ஊழியர்களாவர். (ஐ)

# வர்த்தக வங்கிகளில் ரகசிய கணக்கு வைக்க வெளிநாட்டாருக்கு தடை

கொழும்பு, டிச. 15

வெளிநாட்டுப் பிரஜைகளும் இலங்கைப் பிரஜாவுரிமையற்ற இலங்கையரும் வர்த்தக வங்கிகளில் இரகசியக் கணக்குகளை வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கும் திட்டத்தை ரத்துச் செய்து விடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டின் வங்கிகள் சட்டம் இதற்காகத் திருத்தப்படவிருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

திருத்தச் சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒருவரின் பெயரில் அல்லாது இலக்கம் ஒன்றில் இரகசியக் கணக்குகளை வைப்பதற்கு முந்திய ஐ. தே. க. அரசாங்கம் 1990 நவம்பரில் அனுமதி வழங்கியது.

நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நிரந்தர லஞ்ச ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவிருக்கும் தருணத்தில் இப்புதிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது

இதே வேளை, கறுப்புப் பணத்தை ஒழிக்குமுகமாக கொண்டு வரப்பட்ட சலுகைத் திட்டத்தை ரத்துச் செய்வது குறித்தும் அரசு பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இத் திட்டத்தின் கீழ் கறுப்புப் பணத்தை வைத்திருப்போர் அதனை வங்கியில் காரணம் கூறாமல் வைப்புச் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## கணபதிப்பிள்ளை ஜெயரட்ணம்

(யாழ். சங்கப் பரிசோதகர்)

எமது அலுவலகத்தில் கடமையாற்றிய கணபதிப்பிள்ளை ஜெயரட்ணம் அவர்கள் 11-12-94இல் இறையடி எய்தினார். அச்செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பங்களுடன் நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்.

துயரில் பங்கு கொள்ளும்
யாழ். சங்க ஊழியர்கள்

யாழ். சங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(34200)

# மரண அறிவித்தல்கள்

## ச. அன்ரன் ஜெயக்குமார்

(யாழ். பல்கலைக்கழக ஊழியர்)

சில்லாலையைச் சேர்ந்த சவரிமுத்து அன்ரன் ஜெயக்குமார் 13-12-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சவரிமுத்து திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மலர், மணி, அருட்சகோதரி பிறிஜிட் (ஆபிரிக்கா), பெனிற்றா ஆகியோரின் அன்பு சகோதரனும், றெமூந்துப்பிள்ளை, யோசவ் அன்ரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீபன், திலீபன், டினேஸ் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு காலை 8 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின், சில்லாலை கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
சா. யோசவ் அன்ரன்
(மைத்துனர்)

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.
(34202)

## செல்வி கந்தையா பரமேஸ்வரி

15/11 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட செல்வி க. பரமேஸ்வரி 10-12-94 இல் ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தையா — இளையபிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், சி. பூபதி, காலஞ்சென்ற சண்முகலிங்கம், குணசிங்கம், சுந்தரலிங்கம் (ஜேர்மனி), தர்மலிங்கம், அற்புதராணி ஆகியவர்களின் அன்புச் சகோதரியும், க. சின்னத்துரை, அ. சிறிஸ்கந்தராஜா, அஞ்சலாதேவி, உதயகலா (ஜேர்மனி), புவனமாலா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இவரின் மரணச் சடங்குகள் ஜேர்மனியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
க. தர்மலிங்கம் (சகோதரன்)
அ. சிறிஸ்கந்தராசா (மைத்துனர்)
க. சின்னத்துரை (மைத்துனர்)

(34197)

## திருமதி முருகேசு நல்லம்மா

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு நல்லம்மா 13-12-1994 அன்று கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், மகேஸ்வரி [கனடா], சிவக்கொழுந்து [கொழும்பு], பாலசிங்கம் [ஜேர்மனி], கந்தசாமி, பொன்னம்மா [கொழும்பு], அம்பிகைநாதன் [சுவிஸ்] ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கருணானந்தம், நடராசா மற்றும் இராசலெட்சுமி, ஞானேஸ்வரி, இராமநாதன் [ஜேர்மனி], கமலாம்பிகை [சுவிஸ்[ ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை, பரராஜசிங்கம் மற்றும் கனகசபை [கனடா], அன்னமுத்து, கமலம், அன்னபூரணி [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மு. கந்தசாமி
[மகன்]

97, A.V. றோட்,
அரியாலை.

[34203]

## திருமதி க. தங்கம்மா

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த தங்கம்மா ஈச்சமோட்டையில் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - கனகம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற மைந்தனின் [மாவீரன் பிரதீபன்] அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராசா - பொன்னம்மாவின் அன்பு மருமகளும், செல்வரட்ணம் [ஜேர்மனி], கந்தசாமி [ஜேர்மனி], ரெட்ணா ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி [ஜேர்மனி], தேவி (ஜேர்மனி], சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கல்வயலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், சடாச்சரம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [15-12-1994] வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 20, ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கில்மன் நடராஜா

20, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
[34201]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தொழில் நுட்ப டிப்ளோமா: பரீட்சார்த்திகள் விவரம்

யாழ்ப்பாணம், டிச. 15

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அடுத்த மாதம் ஏழாம்திகதி தெரிவுப்பரீட்சை பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களுக்கு இது பற்றிய அறிவிப்புக் கடிதங்கள் அனுப்பட்டுள்ளன.

தபால் தாமதம் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிப்போருக்கு பரீட்சை குறித்த கடிதம் கிடைக்கத் தாமதமானாலும்—

அவர்கள் பரீட்சை தினத்தன்று தொழில் நுட்பக் கல்விக்குப் பொறுப்பான இயக்குநரை காலை [8.30 மணி அளவில் அவரது அலுவலகத்தில் சந்தித்து தங்கள் தேசிய அடையாள அட்டைகளைக் காட்டிப் பரீட்சைக்குக் தோற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

மாவட்ட ரீதியாகவே விண்ணப்பதாரர்களின் முதலாவது தெரிவு நடைபெற்றுள்ளது. யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவாகியோரின் (யாழ்ப்பாண விலாசம் பதிவு செய்தவர்களின்) விவரம் வருமாறு:-

கே. அரவிந்தன் (அந்திரான், நெல்லியடி), வி. கிருபன் (புதிய செங்குந்தா ஒழுங்கை), பி. சிறீகுமார் (103, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை), ஏ. ஆர். நியூமன் (அம்மன் வீதி, திருநெல்வேலி), எஸ். பிரபாகர் (மலாமலை, வல்வெட்டித்துறை), டபிள்யு. தயாதரன் (கனகரத்தினம் ஒழுங்கை, வட்டுக்கோட்டை), ஆர். ஜனகன் (10 ஏ, வைமன் வீதி, நல்லூர்), ஆர். கலைச்செல்வன் (கே. கே. எஸ். வீதி கோண்டாவில் மேற்கு), கே. திருக்குமார் (உதய விடு, மீசாலைவடக்கு), எல். சுஜந்தன் (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), எஸ். கிருபானந்தன் (மே/பா கே. செல்வராசா, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு), வை. நிர்மலன் (லிங்க வாசா, கந்தரோடை, சுன்னாகம்), எஸ். குஹநேசன் (கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்), பி. சர்மிலன் (றெயில் பாதை கொடைக்காடு, மல்லாகம்), எஸ். உதயகரன் (அராலி மேற்கு, வட்டுக்கோட்டை).

க)

### கோட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோகன் — யூனியன் கல்லூரி — 645

**சண்டிலிப்பாய்**

★ சுஜாதா குமாரசாமி — பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி — 608

★ தாரணி குமாரசிங்கம்— மானிப்பாய் மகளிர் கல்லூரி — 567

**— வேலணை**

★ இராமச்சந்திரன் நாகரூபன் — வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி. — 553

★ யகப்பிரியா நடேஸ்வரன் — புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் — 531

**ஊர்காவற்றுறை**

★ பரமேஸ்வரன் தவராஜா — யாழ்ற்ரன் கல்லூரி — 553

★ ஸ்ரீ விஜயகௌரி கணபதிப்பிள்ளை — ஊர்காவற்றுறை புனித மரியாள் ம.வி. — 507

**மருதங்கேணி**

★ செல்வரெட்ணம் வின்சன் மரியசெல்வம் — செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை — 501

★ சுகதா வெற்றிவேல் — ஆழியவளை சி.சி த க. பாடசாலை — 459

**பருத்தித்துறை**

★ இந்திரலிங்கம் தெய்வேந்திரன் — ஹாட்லிக் கல்லூரி — 657

★ சிவராஜா சுதர்சன் — ஹாட்லிக் கல்லூரி — 642

**சங்கானை**

★ சிவஞானரட்ணம் சிவகாந்தன் — யாழ்ப்பாணக் கல்லூரி — 657

★ கதிர்காமநாதன் ராஜசுதர்சன் — யாழ்ப்பாணக் கல்லூரி — 653

**கோப்பாய்**

★ சிவேஸ் சின்னப்பொடியன் — அத்தியார் இந்து — 622

★ தர்மலிங்கம் சுதாகர் — இடைக்காடு ம.வி. — 621

★ அருணாசலம் ரவீந்திரன் — இடைக்காடு ம.வி. — 621

**உடுவில்**

★ மிதிலா தர்மபாலன் — உடுவில் மகளிர் கல்லூரி—618

சிந்துஜா இரத்தினசிங்கம்— உடுவில் மகளிர் கல்லூரி—615

**சாவகச்சேரி**

★ பிரமிலா சிறிகாந்தன் — சாவகச்சேரி இந்து — 650

★ அருளொளி லோகசுந்தரம் — சாவகச்சேரி இந்து — 638

**கரவெட்டி**

★ அரியநாயகம் தயாபரன் — உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் — 644

★ நர்மதா சிவராஜா — உடுப்பிட்டி மகளிர் கல்லூரி — 619

**பளை**

★ இரட்ணகுமார் மோகனராஜகுமார் — பளை ம. வி — 428

★ சின்னத்துரை பாலேந்திரன் — இயக்கச்சி அ.த.க. பாடசாலை — 425

[ஜ]

### தேசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

679 புள்ளிகள். (7 'டி' 'ஸி')

★ இராஜேந்திரன் திலீபன் சென். ஜோன்ஸ் கல்லூரி — 677 புள்ளிகள் (7 'டி' 'ஸி')

★ புலேந்திரராசா திலீப்காந்த் — சென். ஜோன்ஸ் கல்லூரி — 675 புள்ளிகள் (8 'டி').

★ இராஜகுமாரசாமி நிஷாந்தன் —சென். பற்றிக்ஸ் கல்லூரி — 673 புள்ளிகள் (7'டி' 'ஸி')

★ சங்கீதா பாலசுப்பிரமணியம் — சுண்டிக்குளி மகளிர் கல்லூரி — 666 புள்ளிகள் (6'டி' 2'ஸி')

(உ-ஐ)

### யாழ்ப்பாணக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

— வேம்படி மகளிர்

★ காயத்திரி அசோகன் — வேம்படி மகளிர்

★ நடேசு சுபேந்தன் — மானிப்பாய் இந்துக் கல்லூரி

இவைதவிர —

தேசிய மட்டத்தில் விஞ்ஞான பாடத்தில் ஆகக்கூடிய புள்ளிகளை (94 புள்ளிகள்) பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான சிவராஜா சுதர்சனும் —

கணித பாடத்தில் ஆகக்கூடிய புள்ளிகளை (99 புள்ளிகள்) யாழ். இந்துக் கல்லூரி மாணவனான சிவசோதி செந்தூரனும் பெற்றுள்ளனர்.

(உ-ஐ)

### 17 தமிழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றைச் சேர்ந்த 17 எம்.பிக்களு—னும் ஜனாதிபதி பேச்சு நடத்த விருந்தார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இச்சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறுவதாக இருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் எம்.பிக்கள் அனைவரையும் ஒன்றாக ஜனாதிபதி சந்திக்க இருந்தது இதுவே முதல் தடவையாகும் என்று சொல்லப்படுகிறது.

இப்பேச்சுகள் முடிந்த பின்னர் ஜனாதிபதி தலைமையில் அரச நாடாளுமன்றக் கூட்டமும் நேற்று நடைபெறுவதாக இருந்தது.

இ.தொ.கா. முஸ்லீம் காங்கிரஸ் ஆகியவற்றின் எம்பிக்களையும் அரச நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்புக்கள் திட்டமிட்டபடி இடம்பெற்றனவா என்பதை நேற்றிரவு வரை [illegible] இல்லை.

(உ-எ)

### எழுபது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்க முடியாது எனவும்—

கடந்த 17 வருடங்களாக இடம்பெற்று வந்த முறையற்ற நடைமுறையை மூன்று மாதங்களில் மாற்றுவது கடினம் எனவும்— பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கூறியுள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகளை தடுக்க மேற்கொள்ளப்படும் ஒரு சதி நடவடிக்கை இது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்—

பல்வேறு துறைகளில் நடந்த 60 வேலை நிறுத்தங்களில் 44 வேலை நிறுத்தங்கள் தீர்க்கப்பட்டுள்ளன என்று நீதி, அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஜனாதிபதி நேரடியாக [illegible] தால் அவை தீர்க்கப்பட்டன [illegible] அவர் சொன்னார்.

(உ-3)

### வேலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய அதிகாரிகளும் கடந்த மூன்று வாரங்களாக எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்தனர்.

அவர்களின் அந்த எட்டுக் கோரிக்கைகளில் தங்களை முதலாந்தர வைத்திய அதிகாரிகள் சேவையில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதும் ஒன்றாகும்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து உதவி வைத்திய அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை வேலைக்குத் திரும்பினர்.

ஒருநாள் கழித்து நேற்று டாக்டர்கள் தமது வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

அவர்களின் வேலை நிறுத்தத்தை கைவிடச் செய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா டாக்டர்களுடன் நேற்று நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளையில்,கொழும்பு, பேராதனை, றுகுணு, களனி, சிறீ ஜயவர்தனபுர ஆகிய 5 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மருத்துவ பீட மாணவர்கள் நேற்றுக் காலை கொழும்பு கண்ஆஸ்பத்திரிக்கு அண்மையில் உள்ள லிப்ரன் வளைவில் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தவிர, கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் வதிவிடப் பிரச்சினையை முன்வைத்து பௌத்தலோக மாவத்தையில் உள்ள கலாசார அமைச்சுக் கட்டடத்தை நேற்று அதிகாலையில் கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.

(அ-க-3-6)

### பாப்பரசர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரிய, அமரபுர, ராமண்ய பீடங்களின் மகாநாயக்கர்கள் கொழும்பு கத்தோலிக்க பேராயருக்கு அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில் —

பௌத்த மதத்தை விமர்சிக்கும் வகையில் பரிசுத்த பாப்பரசர் எழுதியுள்ள விடயங்கள் குறித்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு தெற்கில் உள்ள பௌத்த குழு ஒன்று பாப்பரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

பாப்பரசரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் ஒருவரோ தம்முடன் இதுகுறித்து விவாதிக்க வரவேண்டும் என அவர்கள் பாப்பரசருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பாப்பரசர் இலங்கை வரும் போது ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் சாத்தியம் நிலவுவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

(உ-க-3-6)

### தற்போதைய...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ரைம்'' சஞ்சிகையில் வெளியாகியுள்ளது. பேட்டியில் தலைவர் மேலும் கூறியிருப்பதாவது:-

சமாதானத்துக்காக செயற்படுவதற்காகவே சிங்கள மக்கள் சந்திரிகா அம்மையாருக்கு மாபெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதி என்ற முறையில் எமது இனத்தை அங்கீகரித்து, எமக்குரிய உரிமைகளை அவர் வழங்குவதில் தான் அனைத்தும் தங்கியுள்ளது.

தேர்தல் காலத்தில் சமாதானம் குறித்து அரசு காட்டி வந்த ஆர்வம் தற்போது குறைந்துள்ளது.

சமாதானம் குறித்து அரசு எடுக்கும் முடிவுகள் சம்பந்தமாக நாம் மிக விழிப்பாக உள்ளோம்— என்றார்.

(உ-க-3-6)

### தமிழீழக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப் பரீட்சையில் தோற்றியிருந்தனர். இவர்களில் ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த 9 மாணவர்கள் 8 பாடங்களிலும் மிகுதிறன் சித்தி [''டி'' சித்தி] பெற்றுள்ளனர்.

இந்தப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதல் 10 இடங்களையும் —

கல்விக்கோட்ட ரீதியாக முதல் இரு இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் தமிழீழத் தேர்வு ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் இவர்கள் பெறவுள்ளனர்.

# தேடுதல் நடவடிக்கை மலையகத்தில் தீவிரம்!

கொழும்பு, டிச. 15

மலையகத்தில் படையினரின் தேடுதல்களும் கைது நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹட்டன் பகுதியில் மட்டும் கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர்.

ஹட்டனில் உள்ள ஹோமியோபதி வைத்தியரான அ. சாந்தகுமார் என்பவர் கடந்த சனிக்கிழமை விசாரணைக்காக பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்

அண்மையில் ஹட்டனில் பரவலாக இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளின்போது கைது செய்யப்பட்ட சுமார் நூறு மலையக இளைஞர்களில் 12 பேர் நுவரெலியா பொலிஸாரால் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# பிரதமர் நரசிம்மராவுக்கு கட்சிக்குள் நெருக்கடி!

புதுடில்லி, டிச. 15

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு பதிலாக சோனியா காந்தியை காங்கிரஸ் கட்சியின் தலைவராக்க கட்சியின் ஒருபிரிவினர் முயற்சி எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்கு இன்று கூடும் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இவ்விடயம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை—

பிரதமர் நரசிம்மராவ் சோனியா காந்தியை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்து 40 நிமிடங்கள் கலந்துரையாடியதாகவும்—

இவர்களின் சந்திப்பு இந்த நேரத்தில் முக்கியத்துவம் பெறுகிறது என்றும்— தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் ராவ் தாமாகவே பதவியில் இருந்து விலகக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

(உ-3)

# அரசியல் புகலிடம் கோரும் இலங்கை ராஜதந்திரிகள்

கொழும்பு, டிச. 15

மேற்குலக நாடுகளில் இலங்கை வெளிநாட்டுச் சேவையிலுள்ள சில அதிகாரிகள் அரசியற் புகலிடம் கோரியுள்ளனர்.

இதனால் இலங்கை அரசு பெரும் பிரச்சினையை எதிர்நோக்குகின்றது.

— வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முதற் செயலாளர் எவன்ஸ் கூரே பிரிட்டனில் அரசியற் புகலிடம் கோரியுள்ளதால் இலங்கை அரசுக்குப் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

எவான்ஸ் கூரே முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவின் பத்திரிகைச் செயலாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்களவரைத் தாக்கிய தமிழருக்கு 5 வருடம் சிறை!

கொழும்பு, டிச. 15

ஏறாவூரில் திம்புலாகல என்ற இடத்தில் சிங்கள கிராமவாசிகளை தாக்கியதன் மூலம் அரசைக் கவிழ்க்க சதி செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட மலையகத்தமிழ் இளைஞர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி. ஷிராணி திலகவர்த்தனா 5 வருடக் கடூழியச் சிறை விதித்தார்.

கிருஷ்ணதாஸ் புஷ்பதாஸ் என்ற அந்த மலையக இளைஞனுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

ஆயுதம் ஏந்தி ஊர்காவல் படை முகாமை தாக்கியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## சுவாமி பிரேமானந்தா விவகாரம்:

# புலனாய்வு பிரிவு விசாரிக்க ராஜ்ய சபையில் வலியுறுத்து

புதுடில்லி, டிச. 15

தமிழ் நாட்டில் கைதான சுவாமி பிரேமானந்தா மீதான குற்றச்சாட்டுக்களை மத்திய புலனாய்வு அமைப்பு (சி. பி. ஐ.) விசாரிக்க வேண்டும் என்று இந்திய ராஜ்ய சபையில் உறுப்பினர்கள் சிலர் கோரினர்.

ராஜீவ் காந்தியைக் கொன்ற குழுவைச் சேர்ந்த ஒருவர் அடிக்கடி பிரேமானந்த சுவாமிகளின் ஆச்சிரமத்துக்கு அடிக்கடி சென்று வந்தவர் என்றும்—

ராஜீவைக் கொல்லும் சதி ஆசிரமத்திலேயே உருவாகி இருக்கக் கூடும் என்றும்— காங்கிரஸ்கட்சி உறுப்பினர் ஒருவர் ராஜ்ய சபையில் பேசுகையில் தெரிவித்தார்.

(அ-3)

ROTARACT CLUB

போஸ்கோ

ஆதரவில்

கட்டட நிர்மாண நிதிக்காக
யாழ். மிற்ரவுண் றோற்றறக்ற் கழகம் நடத்தும்

கராட்டி இறுதிப் போட்டிகள்

மண்நிறப் பட்டிக்கான சண்டைப் போட்டிகளுடன் போட்டிகள் ஆரம்பமாகும்.

இடம்: யாழ். பல்கலைக்கழக முன்றல் நாவல்
காலம்: மார்கழி 17 ஆம், 18 ஆம் திகதிகளில் மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணி வரை

அன்பளிப்பு;-
20/- 50/- 100/-
சிறுவர்களுக்கு மட்டும் 10/-

அழைப்பிதழ் வழங்கப்பட்ட அனைவரும் மேற்குறிப்பிட்ட திகதியில் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்

[சி/9830]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org